



# செயல்பாட்டு அறிக்கை மே 2025 – நவம்பர் 2025

# டாக்டர் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன்

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்
தகவல் தொழில் நுட்பவியல் & டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்
தி.மு.க. சொத்துப் பாதுகாப்புக்குழு செயலாளர்

/ptrmadurai /meendumptr /PTRmadurai



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் நிறைவுற்று 5ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கிறது. அவரது வழிகாட்டுதலில் நடைபோடும் எனது தலைமையிலான தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மூலமாகவும், எனக்கு வாக்களித்து தொடர்ந்து இரண்டாவது முறையாக வெற்றிபெறச் செய்து, அமைச்சராகப் பணியாற்றிட நல்லதொரு வாய்ப்பை நல்கிய மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மக்களாகிய உங்களுக்கு சட்டமன்ற உறுப்பினராகவும் கடந்த மே 2025 முதல் நவம்பர் 2025 முதலான 6 மாதங்களில் நான் ஆற்றிய பணிகளை இந்த செயல்பாட்டு அறிக்கையின் வாயிலாக உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

இதுவரை, 18 அறிக்கைகள் வெளியிட்டுள்ளேன். கடந்த 9 ஆண்டுகளாக ஒவ்வொரு 6 மாதத்திற்கு ஒருமுறை இந்த அறிக்கையினை உங்கள் கைகளில் ஒப்படைப்பது எனது கடமையெனக் கருதி செயல்பட்டு வருகிறேன். அந்த வகையில் மே 2025 முதல் நவம்பர் 2025 வரையிலான 6 மாத காலத்திற்கான இந்த 19ஆவது அறிக்கையினை உங்கள் கைகளில் ஒப்படைக்கிறேன்.

நமது மதுரை மத்தியத் தொகுதிக்கு நான் ஆற்றிய பணிகள். நான் பொறுப்பு வகிக்கும் தகவல் தொழில் நுட்பவியல் துறை சார்ந்த பணிகள், கழகப் பணிகள், சமூகப் பணிகள் உள்ளிட்ட அனைத்தும் இவ்வறிக்கையில் அடங்கும்.

# மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி உறுப்பினராக எனது பணிகள்

## சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் செயல்படுத்திய திட்டப்பணிகள்

சட்ட மன்ற உறுப்பினர் ஒவ்வொருவரும் தனது தொகுதிக்குத் தேவைப்படும் முக்கியப் பணிகளை செயல்படுத்திடவும் , தேவையான உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்பிடவும், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் செயல்பாட்டில் உள்ளது.

தமிழ்நாடு அரசின் முழு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மக்கள் அளிக்கும் கோரிக்கையின் அடிப்படையில் தனது தொகுதியில் பல்வேறு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவார்கள்.

அந்த வகையில், மக்களுக்குத் தேவையான சாலை, தண்ணீர், கழிப்பறை, பள்ளிக் கட்டிடங்கள், அங்கன்வாடி கட்டிடங்கள், நியாயவிலைக் கடை கட்டிடங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய, மக்கள் அனுதினமும் பயன்படுத்தும் திட்டங்களை எனக்கு ஒதுக்கப்படும் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலம் செயல்படுத்தி வருகிறேன். கடந்த மே 2025 முதல் நவம்பர் 2025 வரையிலான 6 மாத காலத்தில் எனது தொகுதி மேம்பாட்டு நிதியில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்பணிகளின் விவரம்.


**1** **வார்டு 77** சுப்பிரமணியபுரம், சண்முகநாதபுரம் சகாய மாதா பள்ளி அருகே
**ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல்.**



**2** **வார்டு 77** சுப்பிரமணியபுரம், சுண்ணாம்பு காளவாசல் அருகே
**ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல்.**




**3** **வார்டு 76** மேலவாசல் பகுதியில், நமக்கு நாமே திட்டத்தின் மூலம்
**ரூ.45 லட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக் கூடம்.**




**4** **வார்டு 58** மேலப்பொன்னகரம் 2ஆவது தெரு, கோமஸ்பாளையம் பகுதியில்
**ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கட்டிடம்.**



**5** **வார்டு 50** தைக்கால் தெரு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி
**ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கட்டிடம்.**



**6** **வார்டு 50** தைக்கால் தெருவில், மதுரை மாநகராட்சி பொது நிதி
**ரூ.4.99 லட்சம் மதிப்பீட்டில் புதிய போர்வெல்.**



**7** **வார்டு 50** ஆதிமூலம் பிள்ளை பள்ளி வளாகத்தில் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி
**ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம்.**



**8** **வார்டு 54** பவர் ஹவுஸ் சாலையில், மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி
**ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை கட்டிடம்.**



**9** **வார்டு 75** இரத்தினபுரம், வி.வி.கிரி சாலையில் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி
**ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி கட்டிடம்.**



**10** **வார்டு 75** J.R. சாலையில் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதி
**ரூ.11 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கட்டிடம்.**



**11** **வார்டு 56** கரிமேடு மார்க்கெட் பகுதியில் மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள **புதிய அங்கன்வாடி மையக் கட்டிடம்.**



இவை தவிர CSR (பெருநிறுவன சமூகப் பொறுப்பு) நிதியின் மூலம் வார்டு 52, வடக்கு ஆவணி – கீழ ஆவணி மூல வீதி சந்திப்பு. அவ்வை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தின் (TNPFIDCL) CSR நிதி ரூ.124 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும் பல பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. விரைவில் அவை பயன்பாட்டுக்கு வரும். அதில் வார்டு 22, தத்தனேரி அருள்தாஸ்புரம் பகுதியில் புதிதாகக் கட்டப்படவுள்ள ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடப் பணிகளைத் துவக்கி வைத்தது குறிப்பிடத்தக்கது.

# நலத்திட்ட உதவிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் அரசு சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஆதரவற்ற விளிம்பு நிலை மக்களை கண்டறிந்து அவர்களுக்கான புதிய திட்டங்களை வகுத்து சமூகத்தில் அம்மக்களை தலைநிமிரச் செய்து வருகிறது.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவரால் கைவிடப்பட்ட பெண்களுக்கான உதவித்தொகை மட்டுமின்றி ஏழைப்பெண்களுக்கு, தையல் இயந்திரம், தேய்ப்புப் பெட்டி உள்ளிட்ட தொழில் உபகரணங்களைத் தமிழ்நாடு அரசு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், இதுவரை பயனடைந்தோர் விவரங்களை உங்கள் பார்வைக்கு வழங்குகிறேன்.

## நலத்திட்ட உதவிகள் 2021-2025

| இனங்கள் | பயனாளிகள் | மதிப்பு |
|---|---|---|
| முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் | 1511 | NA |
| முதியோர் உதவித் தொகை | 1105 | 15,912,000 |
| ஆதரவற்ற விதவை உதவித் தொகை | 540 | 7,776,000 |
| மாற்றுத்திறனாளி உதவித் தொகை | 63 | 1,134,000 |
| கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை | 37 | 532,800 |
| முதிர் கன்னி உதவித் தொகை | 13 | 187,200 |
| சக்கர நாற்காலி (சொந்த நிதி) 2021 - 2026 | 58 | 458,200 |
| சக்கர நாற்காலி (சொந்த நிதி) 2016 - 2021 | 9 | 108,000 |
| சக்கர நாற்காலி | 7 | 55,300 |
| பேட்டரி பொருத்திய சக்கர நாற்காலி | 4 | 424,000 |
| C.P.சக்கர நாற்காலி | 2 | 20,800 |
| மூன்று சக்கர சைக்கிள் | 3 | 18,100 |
| செயற்கை அவயம் | 5 | 400,000 |
| மாற்றுத் திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர் | 55 | 6,050,000 |
| மாற்றுத் திறனாளிகளுக்கான கைபேசி | 28 | 379,372 |
| காதொலிக்கருவி | 28 | 155,680 |
| சிறப்பு காதொலிக்கருவி | 1 | 600,000 |
| கண் பார்வை அற்றவர்க்கான ஊன்று கோல் மற்றும் கண்ணாடி | 5 | 2,650 |
| நடை பழகு சாதனம் | 2 | 4,290 |
| முழங்கை ஊன்றுகோல் | 1 | 600 |
| மடிக் கணினி (LAPTOP) (சொந்த நிதி) 2016 - 2021 | 13 | 300,040 |
| மாநகராட்சி பள்ளிகளில் 1.புதிய கழிப்பறை 2.புதிய வகுப்பறை கட்டிடங்கள் 3.மராமத்து பணிகள் CSR Fund | 8 | 31,600,000 |
| மாநகராட்சி பள்ளியில் பயின்ற மாணவ மாணவியர்களுக்குக் கல்லூரி கட்டணம் (HDFC CSR FUND) | 97 | 3,283,000 |
| மாநகராட்சி பள்ளிகளில் (SMART CLASS) CSR FUND | 5 | 4,000,000 |
| தையல் இயந்திரம் | 41 | 246,943 |
| தேய்ப்பு பெட்டி | 18 | 87,948 |
| கொரோனா நிவாரண நிதி (Rs.3,00,000) | 2 | 600,000 |
| கொரோனா நிவாரண நிதி (Rs.50,000) | 14 | 700,000 |
| அமைப்புசாரா தொழிலாளர் ஆட்டோ மானியம் | 5 | 500,000 |
| அமைப்புசாரா தொழிலாளர் இறப்பு உதவித்தொகை | 1 | 55,000 |
| அமைப்புசாரா தொழிலாளர் விபத்து இறப்பு உதவித்தொகை | 1 | 500,000 |
| மொத்தம் | 3682 | ₹.76,091,923 |

# கட்டணமில்லா இ-சேவை மையம்

TNeGA

அரசு வழங்கும் திட்டங்கள், சேவைகளைப் பெறுவதற்கு எனது அலுவலகத்தில் இ சேவை மையம் செயல்பட்டு வருகிறது. எந்த விதக் கட்டணமின்றி மக்களுக்கு அனைத்து சான்றிதழ்களும், நலத் திட்டங்களுக்கான பதிவுகள் இங்கு இலவசமாக செய்து தருகிறோம். அந்த மையத்தின் மூலம் பயனடைந்தோர் எண்ணிக்கை மற்றும் விவரம்.

| திட்டங்கள் | பயனாளிகள் | தொகை |
|---|---|---|
| முதியோர் உதவித்தொகை | 27 | 270 |
| விதவை உதவித் தொகை | 13 | 130 |
| மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை | 2 | 20 |
| முதிர்கன்னி உதவித்தொகை | 1 | 10 |
| வருமானச் சான்றிதழ் | 64 | 3840 |
| சாதிச் சான்றிதழ் | 28 | 1680 |
| வாரிசு சான்றிதழ் | 21 | 1260 |
| முதல் பட்டதாரி சான்றிதழ் | 2 | 120 |
| திருமணம் ஆகவில்லை சான்றிதழ் | 4 | 240 |
| விதவைச் சான்றிதழ் | 3 | 180 |
| இருப்புச் சான்றிதழ் | 2 | 120 |
| ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் | 1 | 60 |
| பிறப்பிடச் சான்றிதழ் | 26 | 1560 |
| OBC சான்றிதழ் | 8 | 480 |
| தமிழ் வழிக் கல்வி சான்றிதழ் | 2 | 120 |
| மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் விண்ணப்பம் | 6 | 60 |
| அன்னை சத்தியவாணி முத்து இலவச தையல் இயந்திரம் திட்ட விண்ணப்பம் | 9 | 40 |
| அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய அடையாள அட்டை | 7 | 0 |
| அமைப்பு சாரா தொழிலாளர் வாழ்வு சான்றிதழ் | 3 | 0 |
| அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய அடையாள அட்டை புதுப்பித்தல் | 1 | 0 |
| அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய அடையாள அட்டைத் திருத்தம் | 1 | 0 |
| அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய கல்வி உதவி | 5 | 0 |
| புதிய குடும்ப அட்டைப் பதிவு | 3 | 0 |
| குடும்ப அட்டை திருத்தம் | 9 | 0 |
| இயற்கை பேரிடரால் தொலைந்து போன கல்வி சான்றிதழ் பெற | 1 | 60 |
| மொத்தம் | 249 | ₹.10250 |

# சுப்பிரமணியபுரம் அடுக்குமாடி குடியிருப்பு





நமது மத்திய தொகுதிக்குட்பட்ட வார்டு 77, சுப்பிரமணியபுரம் மாநகராட்சி குடியிருப்பில் நீண்ட காலமாக வசிக்கும் மக்களுக்கு தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.99 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு அடுக்குமாடி குடியிருப்பு கட்டுமானப் பணி விரைவில் நிறைவு பெறவுள்ளது.

11 அடுக்குகள் கொண்ட இக்கட்டிடப்பணிகளைக் கடந்த ஆகஸ்டு 2023ஆம் ஆண்டு தொடங்கி வைத்தேன். இக்குடியிருப்பு 11 அடுக்குகளுடன் லிஃப்ட் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளைத் தொடர்ந்து நேரில் சென்று ஆய்வு செய்து வருகிறேன்.

# அங்கூரான் அறிவியல் மையம்

மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கரிமேடு பகுதியில் CSR திட்டத்தின் கீழ் 'அங்குரான் அறிவியல் மையம்' அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு ரூ.2.50 கோடி மதிப்பீட்டில், அங்குரான் பவுண்டேஷன் சார்பாக இந்த அறிவியல் மையம் அமையவுள்ளது. ஆய்வகங்கள், மின்சார-இயந்திர மாதிரிகளை உருவாக்குவதற்கான ஆய்வுக்கூட வசதிகள், அறிவியல் கண்டுபிடிப்புகள் பற்றிய தரவுகள் அடங்கிய இந்த ஆய்வு மையத்தின் கட்டுமானப் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்துள்ளேன். ஏழை, எளிய அரசுப்பள்ளி மாணவர்கள் தங்கள் கற்றல் திறனை மேம்படுத்திக் கொள்ளும் விதமாக செயல்பாட்டுடன் கூடிய அறிவியல் மையமாக விரைவில் இது திகழ உள்ளது.







# தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சராக எனது செயல்பாடுகள்

## தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்ந்த நிகழ்ச்சிகள்

### ELCOT புதிய அலுவலகம் திறப்பு விழா

தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி புதிய பாய்ச்சலுடன் நிகழும் இக்காலகட்டத்தில், அதிகரிக்கும் இடத்தேவை மற்றும் நவீனபடுத்தலுக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சென்னை எழும்பூரில் உள்ள சிகப்பி ஆச்சி கட்டிடத்தில், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் (ELCOT) புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்தேன். அத்தோடு, இந்நிறுவனத்தின் அடுத்த கட்ட தொழில்நுட்ப பாய்ச்சலை அடையாளப்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய ELCOT குறியீட்டு சின்னத்தையும் (Logo) வெளியிட்டேன்.






### மேம்படுத்தப்பட்ட தமிழ் மின் நூலகம்

வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப யுகத்திற்கு ஏற்ப தமிழ் மொழியைத் தகவமைக்க வேண்டும் என்கிற தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் கால் நூற்றாண்டுக்கு முன் தொடங்கப்பட்ட தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் (TVA) ஒரு பகுதியாகத் திகழ்ந்து வரும் தமிழ் மின் நூலகத்தில், இதுவரை இலட்சக்கணக்கான நூல்கள், பருவ வெளியீடுகள் மற்றும் ஓலைச்சுவடிகள் மின்னுருவாக்கம் செய்யப்பட்டுள்ளன. இதுவரை 17 கோடிக்கும் மேற்பட்ட பார்வைகளைத் தாண்டியுள்ள இந்த நூலகம், தற்போது ஒளிப்படங்கள், ஒலித்தொகுப்புகள், காணொளிகள், நிலவரைபடங்கள் உள்ளிட்டவை அடங்கிய பல்லூடகப் பயன்பாடு, பயநர் விருப்ப அடிப்படையிலான தேடல் மற்றும் வகைப்படுத்தல் வசதி, அரிய ஆவணங்களைப் பயநர்கள் நேரடியாகப் பதிவேற்றும் வசதி எனப் பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளை உள்ளடக்கி மேம்படுத்தப்பட்டுள்ள தமிழ் மின் நூலகத்தை இன்று திறந்து வைத்தேன்.
எந்தவிதக் கட்டணமும் இன்றி இயங்கும் இந்த அறிவுப் பெட்டகத்தின் இணைப்பு இதோ: https://tamildigitallibrary.in






### தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு 'சிறந்த செயல்பாடுகளுக்கான விருது

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையில் இயங்கும் தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் அயராத பணிகளை அங்கீகரிக்கும் விதமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுதந்திர தின விழாவில் 'சிறந்த செயல்பாடுகளுக்கான விருது 2025' வழங்கி ஊக்கமளித்தார்.



## வாட்ஸ்அப் மூலம் 50 அத்தியாவசிய அரசு சேவைகள்



குடிமக்கள் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குதல் மற்றும் திறனை மேம்படுத்துதலில் ஒரு முக்கியப் பாய்ச்சலாக, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை(TNeGA) மற்றும் மெட்டா (Meta India) நிறுவனம் இடையே வாட்ஸ்அப் whatsapp மூலம் குடிமக்கள் சேவைகளை அறிமுகப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திடப்பட்டது. இதனால் ஒரே, தொலைபேசி எண் மூலம் அணுகக்கூடிய வகையில், சாட்பாட்டின் முதல் கட்டத்தில், மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் 50 அத்தியாவசிய அரசு சேவைகளை எந்த நேரத்திலும், எங்கிருந்தும் அணுக முடியும். இந்த சேவை 2026 ஆம் ஆண்டு ஜனவரி முதல் செயல்பாட்டுக்கு வரும்.

## தமிழ்நாடு ஸ்டார்ட் அப் டேட்டா வவுச்சர் திட்டம்




அறிவிப்புகள் அனைத்தையும் மிக விரைவாக செயல்பாடாக்கி வரும் திராவிட மாடல் ஆட்சியின் செயல் திறனின் மற்றொரு எடுத்துக்காட்டாக, 2025-26 நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட 'ஸ்டார்ட் அப் டேட்டா வவுச்சர்' திட்டத்திற்கான அரசாணை ஆகஸ்ட் 25 அன்று வெளியிடப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் ELCOT, iTNT Hub, Startup TN பரிந்துரைக்கும், புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் ரூபாய் 5 லட்சம் என மூன்று ஆண்டுகள் வரை கிளவுட் செலவினங்களுக்கு மானியம் வழங்கப்படும்.

இது சந்தையில் உள்ள முன்னணி கிளைவுட் சேவை வழங்குனர்கள் நிர்ணயிக்கும் கட்டணத்தில் 5-40% வரை தள்ளுபடி வழங்கப்படும். தமிழ்நாட்டில் புத்தொழில் ஊக்குவிப்பிற்கு இத்தகைய திட்டங்கள் பேருதவியாய் அமையும்.

## தமிழ் மின் நூலகத்தில் பாரதியின் கையெழுத்துப் பிரதிகள்




'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று முழங்கிய மகாகவி பாரதியாரின் படைப்புகளை அவரது கையெழுத்திலே உலகத் தமிழர் அனைவரும் படித்து பயனுறும் வகையில், அவர்தம் கையெழுத்துப் பிரதிகளை மின்பதிப்பாக்கி தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் தமிழ் மின் நூலகத்தில் பதிவேற்றம் செய்து, அவரது நினைவு நாளான செப்டம்பர் 11 அன்று மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

## தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற உதவி மையம் (TNTTFC)



சென்னையில், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் iTNT Hub , மாநிலத் திட்டக் குழுவின் ஆதரவுடன் அமைப்பட்டுள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற உதவி மையத்தைத் (Tamil Nadu Technology Transfer Facilitation Centre) திறந்து வைத்தேன். இந்த ஒருங்கிணைந்த மையம், காப்புரிமைகள், கல்வி நிறுவனங்களின் ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி மேம்பாட்டு பணிகளை, Research2Revenue (R2R), Innovation Spotlight போன்ற திட்டங்கள் மற்றும் முழுமையான IP மேலாண்மை ஆதரவு மூலம், வணிகரீதியான தொழில்நுட்பங்களாக மாற்றும் பணியை மேற்கொள்ளும்.

## தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு



தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (iTNT Hub) சார்பில் , சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில், தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நடைபெற்றது. மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இம்மாநாட்டினைத் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வளர்ந்து வரும் பல ஆழ்நிலை புத்தாக்க நிறுவனங்களுக்கு விதை நிதி வழங்கப்பட்டது. மேலும், அமெரிக்கன் சொசைட்டி ஆப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் (ASME), மகேந்திரா அண்ட் மகேந்திரா, போஷ் போன்ற நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

## தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (i TNT Hub) பிராந்திய மையங்கள் திறப்பு விழா



தமிழ்நாட்டின் இரண்டாம் நிலை மூன்றாம் நிலை நகரங்களிலும் புத்தாக்க கண்ணோட்டமும், புத்தொழில் அமைப்பதற்கான வாய்ப்புகளும் பரவலாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதில், ஒரு பகுதியாக தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் 3 பிராந்திய மையங்களைக் கடந்த ஆறு மாத காலத்தில் திறந்து வைத்துள்ளேன். அதில் ஒன்று மதுரையில் அமைக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு பதிவு செய்து கொள்கிறேன்.

- 22/09/2025 அன்று, திருச்சியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் தமிழ்நாடு தொழில்நுட்ப மைய பிராந்திய அலுவலகத்தைத் திறந்து வைத்தேன்.
- 26/09/2025 அன்று மதுரை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் பிராந்திய மையம் திறக்கப்பட்டது.
- 22/11/2025 அன்று கோவை ஜிசிடி வளாகத்தில் பிராந்திய மையம் திறக்கப்பட்டது.



## இந்திய கேம் டெவலப்பர்ஸ் மாநாடு 2025



கேமிங், விஷுவல் கிராபிக்ஸ் துறை மிகப் பெரிய அளவிற்கு வளர்ச்சி பெற்று வரும் சூழலில், இத்துறை சார்ந்த தலைவர்கள், ஆய்வாளர்கள் குழுமம் இந்திய கேம் டெவலப்பர் மாநாடானது கடந்த 16 வருடங்களாக ஹைதராபாத் மற்றும் பூனா ஆகிய நகரங்களில் மட்டுமே நடந்தது. இந்நிலையில் கடந்த ஆண்டு ஹைதராபாத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில் கலந்து கொண்ட நான், இதனைத் தமிழ்நாட்டிற்குக் கொண்டு வர வேண்டும் என்று மேற்கொண்ட முயற்சிகளின் பலனாக பதினேழாவது மாநாடு சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

நவம்பர் 6 அன்று, இம் மாநாட்டினைத் துவக்கி வைத்தேன். நவம்பர் 7 அன்று இந்த மாநாட்டில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு .உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, சிறப்புரை வழங்கினார். அவரது முன்னிலையில் ELCOT நிறுவனம் பல்வேறு முன்னணி நிறுவனங்கள் இடையே புரிந்த ஒப்பந்தங்களை கையெழுத்திட்டது. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு பல புதிய முதலீடுகள் கிடைப்பதோடு, இளைஞர்களுக்கான புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

## 50 புதிய நிரந்தர ஆதார் சேவை மையங்கள்

அரசு சேவைகளை மக்களுக்கு மிக அருகில் கொண்டு சேர்ப்பதிலும், அறிவிப்புகளுக்குச் செயல் வடிவம் அளிப்பதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. அதற்கான மற்றுமொரு சான்றாக, இவ்வாண்டு தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதத்தின் போது மேற்கொள்ளப்பட்ட அறிவிப்பைச் செயலாக்கும் விதமாக, தகவல் தொழில்நுட்பத் துறையின் ELCOT நிறுவனத்தின் சார்பில், தமிழகத்தின் பல்வேறு இடங்களில் 50 புதிய நிரந்தர ஆதார் சேவை மையங்களைத் திறந்து வைத்தேன். இதன் மூலம், எல்காட் மற்றும் அரசு கேபிள் (TACTV) நிறுவனங்கள் இணைந்து இயக்கும் நிரந்தர ஆதார் மையங்களின் மொத்த எண்ணிக்கை 637 ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், மாணவச் செல்வங்கள் மற்றும் பெற்றோரின் சிரமங்களைக் குறைக்கும் விதமாக, மாநிலம் முழுவதும் உள்ள பள்ளி மாணவர்களின் ஆதார் பதிவு, கைரேகை புதுப்பிப்பு உள்ளிட்ட பணிக்காக, முதல் கட்டமாக 16 மாவட்டங்களில் 79 சிறப்பு முகாம்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.


## மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் ESDM மையம் திறப்பு விழா

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத் துறையின் கீழ் இயங்கும் திறன் பயிற்சி நிறுவனமான ICT Academy, ஒன்றிய MeitY அமைச்சகத்தின் ஆதரவுடன் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் அமைத்துள்ள மின்னணு தொழில்நுட்ப வடிவமைப்பு மற்றும் உற்பத்தி சிறப்பு மையத்தைத் (Centre of Excellence in ESDM) திறந்து வைத்தேன். தமிழ்நாட்டின் மின்னணு தொழில்நுட்பத் துறையில் திறமை மிக்க இளம் நிபுணர்களை உருவாக்க இம்மையம் பங்களிக்கும்.



## ITNT Hub மற்றும் மெல்போர்ன் பல்கலைக்கழகம் இடையே நோக்குக் கடிதம்

தமிழ்நாட்டின் புத்தாக்க சூழலையும் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் புதுமை அமைப்பையும் இணைக்கும் நோக்கத்துடன், எனது முன்னிலையில் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (ITNT Hub) மற்றும் மெல்போர்ன் பல்கலைக்கழகம் இடையே நோக்குக் கடிதம்(LoI) கையெழுத்தானது. தமிழ்நாட்டில் ஆழ்நிலை மற்றும் வளர்ந்து வரும் தொழில் நுட்ப புத்தாக்க ஒத்துழைப்பை வலுப்படுத்தும் முயற்சியாக இது அமையும்.



# பிற மாநிலங்களில் தமிழ்நாட்டின் பிரதிநிதியாக பங்கேற்ற நிகழ்வுகள்

## கேரளா – உலகளாவிய ஐயப்ப பக்தர்கள் மாநாடு



கேரள அரசு மற்றும் திருவிதாங்கூர் தேவசம் போர்டின் ஒருங்கிணைப்பில், புனித பம்பை நதிக்கரையில் நடைபெற்ற உலகளாவிய ஐயப்ப பக்தர்கள் மாநாடு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு அரசின் சார்பாக, மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு அவர்களுடன் பங்கேற்றது பெருமைக்குரிய நிகழ்வாக அமைந்தது. இந்த நிகழ்ச்சி அரசு சார்பாகப் பங்கேற்ற ஒன்றாக மட்டுமல்லாமல், ஐயப்பன் சிலை உருவாக்கம், பிரதிஷ்டை மற்றும் வழிபாட்டைப் பரவலாக்கும் பணியில் என் தாத்தா தமிழவேள் பி.டி. ராஜன் அவர்கள் ஆற்றிய பங்களிப்பை நினைவுகூர்ந்த, தனிப்பட்ட முறையில் நெகிழ்ச்சியளிக்கும் நிகழ்வாகவும் அமைந்தது. வாய்ப்பளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி.

## பஞ்சாப்–குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350–வது ஆண்டு விழா

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக, பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ஆனந்த்பூர் சாகிப் நகரில் நடைபெற்ற ஒன்பதாவது சீக்கிய குரு ஸ்ரீ குரு தேக் பகதூர் அவர்களின் உயர்ந்த தியாகத்தின் 350-வது ஆண்டு விழாவில் பங்கேற்றதில் பெருமை அடைந்தேன். நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராச்சாமி அவர்களுடன் இணைந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துக் கடிதத்தை மாண்புமிகு பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. பகவந்த் சிங் மான் அவர்களிடம் வழங்கினேன்.



# கருத்தரங்குகள், முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள்




தகவல் தொழில்நுட்பம் , இணைய பாதுகாப்பு, செயற்கை நுண்ணறிவு, தொழில் வளர்ச்சி, திறன் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொழில் கூட்டமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள் ஒருங்கிணைக்கும் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு நமது திராவிட மாடல் அரசு தொலைநோக்குப் பார்வையோடு மேற்கொண்டு வரும் மேம்பாட்டு திட்டங்கள், உலகளாவிய போக்குகள் ஆகியவை குறித்து எனது கருத்துக்களைப் பதிவு செய்து வருகிறேன்.



## MADURAI VISION 2035

இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) தமிழ்நாட்டில் உள்ள இரண்டாம் நிலை நகரங்களில் தொழில்/ முதலீட்டு ஊக்குவிப்பை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. அதன் ஒரு முக்கிய பகுதியாக மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அடுத்த 10 ஆண்டுகளில் மதுரையின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு சிறப்பான வாய்ப்புகள் குறித்த **Madurai Vision2035** ஆவணத்தை வெளியிட்டு தலைமை உரை நிகழ்த்தினேன்.

# தொழில்நுட்ப நிறுவனங்கள் & கல்வி நிலையங்கள் இடையிலான உறவை வலுப்படுத்தும் பிரிட்ஜ் (BRIDGE) மாநாடுகள்

2009 ஆம் ஆண்டு முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்டு, தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் 16 ஆண்டுகளாக இயங்கும் தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் (ICT Academy) நாடு முழுவதும் பத்து பிராந்திய அலுவலகங்கள், சுமார் 2000 கல்வி நிறுவனங்களுடன் இதுவரை பல லட்சக்கணக்கான மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கி வருகிறது. மேலும், தொழில்துறையில் உள்ள தேவைகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி பாடத்திட்டத்திற்கும் உள்ள இடைவெளியை நிரப்பும் பொருட்டு , கல்வி நிறுவன தலைவர்கள், தொழில்நுட்ப நிறுவன தலைவர்கள் மற்றும் உயர் நிர்வாகிகள், மாணவர்கள், கல்வியாளர்கள் ஆகியோர் குழுமி, ஆக்கப்பூர்வமான கருத்துப் பரிமாற்றங்களை நிகழ்த்துவதற்கு வகை செய்யும் BRIDGE மாநாடுகளை தொடர்ச்சியாக நடத்தி வருகிறது.

ஜூன் முதல் நவம்பர் வரையிலான ஆறு மாதங்களில் மட்டும் ஏழு மாநாடுகள் மதுரை, சென்னை உள்ளிட்ட இந்தியாவில் உள்ள பல்வேறு நகரங்கள் மற்றும் முதல்முறையாக தேச எல்லை கடந்து மலேசியாவில், கோலாலம்பூரில் நடைபெற்றுள்ளது, இவ்வனைத்து மாநாடுகளிலும் துறை அமைச்சர் என்கிற முறையில் கலந்து கொண்டு தொழில்நுட்பக் கல்வியில் மேற்கொள்ள வேண்டிய சீராய்வுகள் குறித்து சிறப்புரை வழங்கியதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**63** வது பிரிட்ஜ் மாநாடு ஜூன் 26 (26/06/2025) அன்று சென்னையில் நடைபெற்றது

**64** வது பிரிட்ஜ் மாநாடு ஜூலை 3 (03/07/2025) அன்று முதல்முறையாக இந்தியாவிற்கு வெளியே, மலேசியா கோலாலம்பூர் நகரில் சிறப்பாக நடைபெற்றது.

**65** வது பிரிட்ஜ் மாநாடு ஆகஸ்ட் 21 (21/08/2025) அன்று கோவையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில், வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் ஐசிடி அகாடமி மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், (TNSDC) இணைந்து 20,000 இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி வழங்கும் திட்டம் துவங்கப்பட்டது.

**66** வது பிரிட்ஜ் மாநாடு செப்டம்பர் 3 (03/09/2025) அன்று புதுடெல்லியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நான், காணொளி வாயிலாகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினேன்.

**67** வது பிரிட்ஜ் மாநாடு செப்டம்பர் 25 (25/09/2025) அன்று, நமது மதுரை மண்ணில் நடைபெற்றது.

**68** வது பிரிட்ஜ் மாநாடு நவம்பர் 7 (07/11/2025) அன்று பெங்களூரில் நடைபெற்றது.

**69** வது பிரிட்ஜ் மாநாடு நவம்பர் 13 (13/11/2025) அன்று ஹைதராபாத்தில் நடைபெற்றது.












## அண்ணா பல்கலைக்கழகத்தில் Nemetschek COE திறப்பு விழா

நான் கடந்த ஆண்டு ஜெர்மனி சென்ற போது Nemetschek நிறுவனத்தின் தலைமையகத்தைப் பார்வையிடும் வாய்ப்பு அமைந்தது , இந்நிறுவனத்தின் அதி நவீன தொழில்நுட்ப புத்தாக்கங்களைத் தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்த முயற்சிக்கவேண்டுமென அப்போது வலியுறுத்தினேன். அதன் தொடர்ச்சியாக அந்நிறுவனம் சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் நிறுவியுள்ள Nemetschek Centre of Excellence for Architecture, Engineering & Construction மையத்தைத் திறந்து வைத்தேன், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் துறையின் ICT Academy அமைப்பும் இந்த மையத்தின் செயலாக்கத்திற்கு துணை புரிய உள்ளது. கட்டிடப் பொறியியல் போன்ற அடிப்படைத் துறைகள் காலத்திற்கு ஏற்ப வளர்ந்து நமது நாட்டின் முன்னேற்றத்திற்குத் தொடர்ந்து பங்களிப்பை வழங்குவதற்கு இம்மையம் பெரும் துணை புரியும் .



## சர் சங்கரன் நாயர் அவர்களின் 168வது பிறந்தநாள் விழா



ஆங்கிலேய ஆட்சிக்காலத்திலேயே மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் நிரந்தர நீதிபதியாக பணியாற்றி, வைஸ்ராய் கவுன்சிலின் உறுப்பினர் உள்ளிட்ட பல உயர் பதவிகளை வகித்த சர் சங்கரன் நாயர் அவர்களின் 168வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னையில் மலையாளி கிளப் அமைப்பு ஒருங்கிணைத்த விழாவில்,முன்னாள் தேசியப் பாதுகாப்பு ஆலோசகரான திரு.எம்.கே. நாராயணன் மற்றும் பிரதமரின் முன்னாள் முதன்மைச் செயலாளரான திரு.டி.கே.நாயர் ஆகியோருடன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, நீதிக்கட்சி ஆட்சி அமைப்பதற்கு வகை செய்த மாண்டேகு செம்ஸ்ஃபோர்ட் சீர்திருத்தங்கள் போன்றவற்றில் திரு. சங்கரன் நாயர் அவர்கள் ஆற்றிய பங்களிப்பைக் குறிப்பிட்டு உரையாற்றினேன்.

## GCC Coimbatore Summit 2025




கோவையில் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) ஒருங்கிணைத்த GCC Coimbatore Summit 2025 உலகளாவிய திறன் மையங்கள் மாநாட்டில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு, கோவையில் உலகளாவிய திறன் மையங்கள் அமைவதற்கான சாதகமான அம்சங்களை விளக்கும் CII தயாரித்த ஆய்வு அறிக்கையை வெளியிட்டு சிறப்புரையாற்றினேன்.

## NABARD 44வது துவக்க தின விழா



தேசிய வேளாண் மற்றும் கிராமப்புற மேம்பாட்டு வங்கியின் (NABARD) 44வது துவக்க தின விழாவில், உலக சுகாதார நிறுவனத்தின்(WHO) தலைமை ஆராய்ச்சியாளர் திருமிகு.சௌமியா சுவாமிநாதன் அவர்களுடன் கலந்து கொண்டு, வேளாண்மை மற்றும் வேளாண் சார் சிறு தொழில் நிறுவனங்கள் வளர்ச்சி அடைவதற்கு நபார்டு வங்கி ஆற்றிவரும் பெரும் பங்களிப்பைக் குறிப்பிட்டு உரையாற்றினேன்.

## CII_IWN மதுரை கிளை துவக்க விழா



மதுரை மாநகரில் நடைபெற்ற, CII இந்திய மகளிர் பின்னகம்(CII_IWN) மதுரை கிளை துவக்க விழா மாநாட்டில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு, தமிழ்நாட்டின் சிறப்பான பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கும் மின்னணு, மென்பொருள், காலணி மற்றும் டெக்ஸ்டைல் உற்பத்தி ஆகியவற்றில் பெண்களின் பங்களிப்பு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பதிவு செய்ததோடு நீதிக் கட்சி தொடங்கி நூற்றாண்டு காலமாகத் திராவிட இயக்கம் பெண்களின் முன்னேற்றத்தில் மிகுந்த கவனம் செலுத்தி வருவதையும் பதிவுசெய்தேன்.

## ICAI-SIRC 7வது பிராந்திய மாநாடு



இந்திய பட்டைய கணக்காய்வாளர்கள் கழகத்தின்(ICAI) தென்னிந்தியப் பிராந்திய கவுன்சிலின் (SIRC) சார்பில் நடைபெற்ற 57வது பிராந்திய மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, உலகமயமாக்கல் தடையற்ற வர்த்தகத்தின் கடந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் குறித்த விரிவான உரையினை நிகழ்த்தினேன்.

## சர்வதேச தமிழ் பொறியாளர் மன்ற மாநாடு



அடிப்படையில் நான் ஒரு பொறியியல் பட்டதாரி என்பதை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச தமிழ் பொறியாளர் மன்றத்தின் (ITEF) சார்பாக நடைபெற்ற தொழில்முறை மேம்பாட்டு மாநாடு மற்றும் கண்காட்சி 2025-ல், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் திரு. எஸ். எஸ். சிவசங்கர் அவர்களுடன் கலந்துகொண்டு, பொறியியல் என்பது தமிழர்களின் மரபிலேயே பொதிந்த ஒன்று என்பதைக் குறிப்பிட்டு உரையாற்றினேன்.

## TIOL வெள்ளி விழா



வரிவிதிப்பு கொள்கைகள் குறித்த முக்கியமான தகவல்களை வழங்குவதோடு, அவசியமான விவாதங்களைத் தொடர்ந்து உருவாக்கி வரும் TIOL அமைப்பின் வெள்ளி விழா கொண்டாட்ட நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டேன். அங்கு, முன்னாள் CBEC தலைவர் திரு. சுமித் தூத்த் மஜும்தர் அவர்களுடன், TIOL அமைப்பின் தொடர் செயற்பாடுகளைப் பாராட்டி, அவர்களின் பணி தொடர்ந்து நடைபெற வாழ்த்தினேன்.



## ஜி.டி. நாயுடு அருங்காட்சியக செயல்திறன் கார் பிரிவு துவக்க விழா

தமிழ்நாட்டின் தலைசிறந்த விஞ்ஞானியாக விளங்கியவரும், எங்கள் தாத்தா தமிழவேள் பி.டி. ராஜன் அவர்களின் நெருங்கிய நண்பருமான திரு. ஜி.டி. நாயுடு அவர்களின் நினைவு அருங்காட்சியகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள செயல்திறன் கார் பிரிவைத் துவக்கி வைத்தது மிகுந்த மகிழ்ச்சியளித்தது.



## தமிழ் முழக்கம் மேடைப் பேச்சு

மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் சார்பில் நடைபெற்ற, தமிழ் முழக்கம் மேடைப் பேச்சு ஆளுமைத்திறன் மேம்பாட்டுப் பயிற்சி பன்னாட்டுப் பயிலரங்க நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பயிலரங்கில் பங்கேற்ற பேச்சாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினேன். இந்த நிகழ்வில் மதுரை மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் இ.ஆ.ப., திரு.. கோ. தளபதி எம் எல் ஏ., உலகத் தமிழ்ச் சங்க செயலாளர் முனைவர் ந. அருள், உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



## "The Man Who Fed India" புத்தக வெளியீட்டு விழா

இந்தியாவில் வேளாண் புரட்சியைச் சாத்தியப்படுத்திய வேளாண் விஞ்ஞானி திரு. எம்.எஸ். சுவாமிநாதன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் கூறும் "M.S. Swaminathan: The Man Who Fed India என்ற புத்தக வெளியீட்டு விழாவில், மக்கள் நீதி மையத்தின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர்.கமலஹாசன் அவர்களுடன் பங்கேற்றேன்; தொடர்ந்து, இப்புத்தகத்தின் ஆசிரியர் திருமதி.பிரியம்படா ஜெயக்குமார் அவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டேன்.



## தமிழியக்கத்தின் எட்டாம் ஆண்டு தொடக்க விழா

மதுரை தியாகராசர் கல்லூரியில் தமிழியக்கத்தின் எட்டாம் ஆண்டு தொடக்க விழா நடைபெற்றது. இவ்வமைப்பின் நிறுவனத் தலைவர் VIT வேந்தர் திரு. கோ.விஸ்வநாதன் அவர்கள் கலந்து கொள்ள இயலாத நிலையில் அவரின் கோரிக்கையை ஏற்று நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று சிறப்புரை வழங்கியதோடு, அதன் தொடர்ச்சியாகக் கவிஞர் பாவலர் அறிவுமதி அவர்களுக்கு ஒரு லட்சம் பரிசுத் தொகையுடன் கூடிய தமிழியக்க விருதினை வழங்கினேன் .




## CII Connect Madurai 2025

மதுரையில் நடைபெற்ற இந்தியத் தொழில் கூட்டமைப்பின் (CII) , 8வது CONNECT MADURAI 2025 மாநாட்டில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, மதுரை வரலாற்றுப் பெருமைகள் கொண்ட நகரம் மட்டுமல்ல, எதிர்கால தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் தயாராக உள்ள நகரம் என்பதைக் குறிப்பிட்டு உரையாற்றினேன்.



## India Today - South Conclave

இந்தியா டுடே குழுமம், கோவையில் ஒருங்கிணைத்த 'சவுத் கான்கிளவ்' மாநாட்டில், இந்தியா டுடே குழுமத்தின் ஆசிரியத்துறை இயக்குனர் திரு. ராஜ் செங்கப்பா மற்றும், ஊடகவியலாளர் திரு பிரமோத் மகாதேவ் ஆகியோருடனான கலந்துரையாடல் அமர்வில் பங்கேற்று செயற்கை நுண்ணறிவு கோலோச்சும் இக்காலகட்டத்தில் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்த எனது கருத்துக்களைப் பதிவு செய்தேன்.




## TN Global Startup Summit 2025

கோயம்புத்தூரில் நடைபெற்ற, உலகளாவிய புத்தொழில் மாநாடு 2025 இல் கலந்துகொண்டு தமிழ்நாடு செயற்கை நுண்ணறிவு செயல்திட்டம் மற்றும் குடிமக்களுக்கு வழங்கப்படும் அரசு சேவைகள், புத்தாக்கங்களை மேம்படுத்த எவ்வாறு செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை அரசு செயல்பாட்டுடன் இணைப்பது என்பதை குறித்து உரையாற்றினேன்.

# கழக நிகழ்ச்சிகள்

## ஓரணியில் தமிழ்நாடு (September 2025)





வேளச்சேரி மேற்குப் பகுதி திமுக சார்பில் நடைபெற்ற 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு கூட்டத்தில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா . சுப்பிரமணியன் அவர்களுடன் கலந்து கொண்டு, மும்மொழிக் கொள்கை, NEET தேர்தல் ஆணைய முறைகேடுகள் மற்றும் நிதிப் பகிர்வில் காட்டப்படும் பாரபட்சம் குறித்து எனது கருத்துக்களைப் பகிர்ந்ததோடு, தமிழ்நாட்டை எந்த சூழ்நிலையிலும் தலைகுனிய விடமாட்டோம்; நம் தமிழ் மண்ணின் மாண்பையும், எதிர்காலத் தலைமுறையின் உரிமைகளையும் காத்திட நமது கழகத் தலைவர் – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கரங்களை வலுப்படுத்த அயராது உழைப்போம் எனத் தெரிவித்தேன்.

# கவனம் பெற்ற நேர்காணல்கள்

சிறப்பு தீவிர சீர்திருத்தம் பற்றியும் தேர்தல் ஆணையம் போன்ற சுயாதீன அமைப்புகளின் ஒருதலை பட்சமான செயல்பாடுகள் குறித்தும் அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் கழக அரசு தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. உச்ச நீதிமன்றத்தில் சிறப்பு தீவிர சீர்திருத்தத்தை எதிர்த்து நமது அரசு வழக்கு தொடர்ந்துள்ளதுடன் , வாக்காளர் பட்டியலில் தகுதியான அனைவரது பெயரும் இடம்பெறச் செய்ய தேவையான அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக, SIR நாம் எதிர்ப்பதற்கான காரணங்களை வெகு மக்கள் அறியும்படி விளக்கி சன் நியூஸ் போன்ற தமிழ் செய்தி தொலைக்காட்சிகளுக்கும், NDTV, Times now, TheWire போன்ற அகில இந்திய ஊடகங்களுக்கும் நேர்காணல்கள் வழங்கினேன்.



சிறப்பு தீவிர சீர்திருத்தம் குறித்தும் சுயாதீன அமைப்புகளின் ஒருதலைபட்சமான செயல்பாடுகள் குறித்தும் **Times Now** ஊடகத்துக்கு அளித்த நேர்காணலில் விவரித்தேன்.

**15/11/2025**

சிறப்பு தீவிர சீர்திருத்தம் குறித்து **NDTV** ஊடகத்தில் திரு. சாம் டானியல் அவர்களுடன் கலந்துரையாடினேன்.

**17/11/2025**





தேர்தல் ஆணையத்தின் முறைகேடுகள் குறித்து திரு. கரண் தாபர் அவர்களுடன் தி வயர் ஊடகத்தில் கலந்துரையாடினேன்.

**22/11/2025**



# அயல்நாட்டு தூதர்களுடன் சந்திப்பு, தூதரக நிகழ்ச்சிகளில் பங்கேற்பு:



இந்தியாவுக்கான சிங்கப்பூர் நாட்டின் தூதுவர் திரு.சைமன் வாங் அவர்களையும் , சென்னைக்கான துணைத் தூதர் திரு.எட்கர் பாங், அரசியல் தூதர் திருமிகு.வைஷ்ணவி வாசுதேவன், துணை செயலர் திரு. ஹர்ஷ்விர் சிங் ஆகியோரைச் சென்னையிலுள்ள எனது முகாமில் சந்தித்து, தமிழ்நாடு-சிங்கப்பூர் உறவை இன்னும் வலுப்படுத்துவது, புதிய ஒத்துழைப்புகளுக்கான சாத்தியங்கள் குறித்து உரையாடியது ஆக்கபூர்மாக அமைந்தது



மலேசியாவின் முதல் டிஜிட்டல் துறை அமைச்சரான திரு. கோபிந்த் சிங் டியோ அவர்களை (YB Tuan Gobind Singh Deo) சந்தித்தது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. எனது மலேசிய பயணத்தின்போது நடைபெற்ற இச்சந்திப்பில், செயற்கை நுண்ணறிவு மற்றும் அரசு தொழில்நுட்பம் (GovTech) ஆகிய விஷயங்கள் விவாதிக்கப்பட்டன. இத்தகைய சந்திப்புகள் டிஜிட்டல் ஆளுமை மற்றும் வளர்ந்துவரும் புதிய தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்புக்கான பல வாய்ப்புகளைத் திறப்பதோடு, தமிழ்நாடு-மலேசியா இடையே நூற்றாண்டுகளான வரலாற்று உறவுகளை வலுப்படுத்துகின்றன



புதுச்சேரி மற்றும் சென்னைக்கான பிரான்ஸ் தூதரகத்தின் துணைத் தூதர் திரு. எடியன் ரோலாந்த்-பியேக் அவர்களின் அழைப்பை ஏற்று பிரான்ஸ் தேசிய நாள் (France National Day) விழாவில் பங்கேற்று உரையாற்றினேன்



இந்தியாவுக்கான பெரு நாட்டின் தூதரகம் சார்பில் நடைபெற்ற பெரு (Republic of Peru) நாட்டின் 204 ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினேன்.



இந்தியாவுக்கான அமெரிக்காவின் தற்காலிகத் தூதர் திரு. ஜோர்கன் கே. ஆண்ட்ரூஸ், சென்னையிலுள்ள அமெரிக்க துணைத் தூதர் திரு. கிறிஸ் ஹோட்ஜஸ், அரசியல் & பொருளாதார பிரிவின் தலைவர் திரு. பிரையன் ஸ்மைசர், ஆகியோரை எனது முகாம் அலுவலகத்தில் சந்தித்தேன். செயற்கை நுண்ணறிவு சார்ந்த புதுமைகள், சைபர் பாதுகாப்பு, பொது டிஜிட்டல் உள்கட்டமைப்பு ஆகிய பொருண்மைகளில் பயனுள்ள உரையாடல் நடைபெற்றது



சிங்கப்பூர்-இந்தியா இடையேயான அரசு சார் உறவின் 60ஆம் ஆண்டை கொண்டாடும் விதமாக நடைபெற்ற விழாவில், சென்னையில் உள்ள சிங்கப்பூர் துணைத் தூதரகம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில் பங்கேற்று தமிழ்நாடு அரசு சார்பில் வாழ்த்துகளைத் தெரிவித்து, தமிழ்நாடு-சிங்கப்பூர் இடையேயான நீடித்த பொருளாதார, வரலாற்று மற்றும் கலாச்சார உறவுகள் குறித்து உரையாற்றினேன்.



சென்னையில் உள்ள தாய்பெய் பொருளாதார மற்றும் கலாச்சார மையத்தின்(Taipei Economic and Cultural Center) சார்பில் நடைபெற்ற தாய்வான் தேசிய தின கொண்டாட்டத்தில் (National Day of the Republic of China (Taiwan)) கலந்துகொண்டேன். அங்கு, செமிகண்டக்டர், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற துறைகளில் தாய்வான்-தமிழ்நாடு இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருப்பதைப் பதிவு செய்தேன்.

சென்னையில் உள்ள ஜெர்மன் நாட்டின் துணைத் தூதரகம் சார்பில் ஒருங்கிணைக்கப்பட்ட 'ஜெர்மனி ஒற்றுமை தின (German Unity Day) விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் ஜெர்மன் நாட்டைச் சார்ந்த நிறுவனங்களின் முதலீடுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதையும், இந்த பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியான உறவு மென்மேலும் வலுவடைய வாய்ப்பு இருப்பதையும் மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு உரையாற்றினேன்..



# இந்திய மற்றும் உலகளாவிய கல்வி நிலையங்களில்

## MEASI தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 19ஆவது பட்டமளிப்பு விழா

சென்னையில் உள்ள MEASI தகவல் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 19ஆவது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு, MCA உயர்படிப்பை நிறைவு செய்த மாணவர்களுக்குப் பட்டமளித்து, சிறுபான்மை சமூகத்தின் கல்வி வளர்ச்சியை மனதில் கொண்டு தொலைநோக்குப் பார்வை கொண்ட பல பெரிய மனிதர்கள் இணைந்து தொடங்கிய இந்தக் கல்வி நிறுவனம் நூற்றாண்டுகளாக இயங்கி வரும் நிலையில், இதில் பயின்ற மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் வெற்றி அடைவதைத் தாண்டி சமூகப் பொறுப்பையும் உணர்ந்து செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டு உரையாற்றினேன்.



## ஸ்ரீ மீனாட்சி மகளிர் கலைக் கல்லூரியின் 48வது பட்டமளிப்பு விழா

மதுரை ஸ்ரீ மீனாட்சி மகளிர் கலைக் கல்லூரியின் 48வது பட்டமளிப்பு விழாவில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு 1500க்கும் மேற்பட்ட மாணவிகளுக்கு இளங்கலை, முதுகலைப் பட்டம் வழங்கி, நமது சொந்த வாழ்க்கை நலனைக் கடந்து, என்றைக்கு மற்றவர்களின் நலனுக்காகச் சிந்திக்க முற்படுகிறோமோ, அன்றைக்குத்தான் நாம் உண்மையில் வெற்றியடைந்தவர்கள் ஆகிறோம் என அறிவுறுத்தி, அவர்களின் எதிர்காலம் சிறக்க வாழ்த்தினேன்.



## அமெரிக்காவில் – ஓ.பி. ஜிந்தால் குளோபல் யுனிவர்சிட்டியின் (JGU) தொடர் மதிப்புமிகு பொது விரிவுரை

ஓ.பி. ஜிந்தால் குளோபல் யுனிவர்சிட்டியின் (JGU) மதிப்புமிகு பொது விரிவுரை தொடரின் பகுதியாக, ஜூலை 19 அன்று, நியூயார்க்கில் உள்ள ஹார்வர்டு கிளப்பில் நடந்த JGU முன்னாள் மாணவர் சந்திப்பில் “India at 2047: The Future of Law & Justice in the World’s Largest Democracy” என்ற தலைப்பில் சட்டம் & நீதியின் எதிர்காலம் குறித்து கருத்துரை வழங்கினேன். அத்துடன், JGU-வின் 2025 நிலையான வளர்ச்சி அறிக்கை வெளியிடப்பட்டது.

தொடர்ந்து, ஜூலை 25 அன்று, கேம்பிரிட்ஜில் உள்ள புகழ்பெற்ற ஹார்வர்டு சட்டக் கல்லூரியில் (Harvard Law School) “75 Years of Indian Constitution and the Supreme Court of India: The Role of Human Rights & Public Policy for Empowering Citizens” என்ற பொருளில் உரையாற்றினேன். உச்சநீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி திரு. யு.யு. லலித் அவர்கள், உலகளாவிய அறிஞர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் பங்கேற்ற இத்தகைய அறிவார்ந்த நிகழ்ச்சிகளில் எனது கருத்துக்களைப் பதிவு செய்தது பெரும் மகிழ்ச்சியை அளித்தது.







## குட் ஷெப்பர்ட் கான்வென்ட் மற்றும் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழா:



தமிழ்நாட்டில் கல்வி வளர்ச்சிக்குக் கிறிஸ்துவ மிஷனரிகள் ஆற்றிய பங்கு அளப்பரியது, அவ்வகையில் சென்னையில் கடந்த 100 ஆண்டுகளாகக் கல்வி வளர்ச்சிக்கு அதிலும் குறிப்பாகப் பெண் கல்வி வளர்ச்சிக்கு மகத்தான பங்களிப்பைச் செலுத்தி வரும் குட் ஷெப்பர்ட் கான்வென்ட் மற்றும் மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு அக்கல்வி நிறுவனத்தின் தொண்டை பாராட்டினேன்.

## VIT கல்வி நிறுவனத்தின் 13 ஆவது பட்டமளிப்பு விழா




சென்னையில் உள்ள VIT கல்வி நிறுவனத்தின் 13 ஆவது பட்டமளிப்பு விழாவில், VIT நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் கோ.விஸ்வநாதன் அவர்களுடன் கலந்து கொண்டு மாணவ மாணவியருக்கு பட்டம் வழங்கி, மாணவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் புதிதாகக் கற்றுக் கொள்வதற்கான ஆர்வத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுரை வழங்கி வாழ்த்தினேன்.

## JGU நடைபெற்ற நீதித்துறையின் சுதந்திரம் குறித்த சர்வதேச கருத்தரங்கு




ஓ.பி. ஜிந்தால் குளோபல் யுனிவர்சிட்டி (JGU) நடத்திய நீதித்துறையில் சுதந்திரம் குறித்த சர்வதேச கருத்தரங்கில் கலந்து கொண்டேன். உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி, பல்வேறு உயர்நீதிமன்றங்களின் நீதிபதிகள், மேனாள் தலைமை நீதிபதிகள், சர்வதேச நீதிமன்றங்களில் நீதிபதிகள், சட்டக் கல்வித்துறை அறிஞர்கள் கலந்து கொண்ட இந்த மாநாட்டின் இறுதி அமர்வில் சட்டமன்றம், அரசாங்கம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றுக்கிடையிலான உறவுகள் என்கிற தலைப்பில் JGU பல்கலைக்கழக மதிப்புமிகு பேராசிரியர் அவர்களுடன் கலந்துரையாடினேன்.

# தொழில்நுட்ப நிறுவனங்கள் தொடக்க விழாக்கள்



சென்னையில் “GlobalLogic” நிறுவனத்தின் புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்து, சென்னையின் திறன் வாய்ந்த தொழிலாளர்களும், கல்வி வளர்ச்சியும், பெண்களின் பங்களிப்புமே இத்தகைய நிறுவனங்களை சென்னையை நோக்கி ஈர்க்கின்றன என்று குறிப்பிட்டேன்.



Likewize நிறுவனத்தின் சென்னை கிளை தொடக்க விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, இந்நிறுவனம் உலகளாவிய ஒருங்கிணைப்புக்கும் தமிழ்நாட்டின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் உதாரணமாகத் திகழ்வதாகக் குறிப்பிட்டேன்.



மதுரையில் நடைபெற்ற “Simbli” AI புத்தாக்க நிறுவனத்தின் தொடக்க விழாவில் கலந்துகொண்டு, தமிழ்நாட்டின் சமநிலையான, அனைத்து மாவட்டங்களையும் ஒருங்கிணைத்த வளர்ச்சியின் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இதைக் குறிப்பிட்டேன்.



# மதுரை மாநகர் மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்புத் திட்டங்கள்

மதுரை மாநகர் வளர்ச்சிக்குப் பல்வேறு திட்டப்பணிகள் அவசியம் என்று கருதி ஆட்சி பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் மதுரை மாநகர் சார்பாக ஒரு வரைவு அறிக்கையினைச் சமர்ப்பித்தோம். அந்த வகையில், பல்வேறு உட்கட்டமைப்பு பணிகளுக்காக முதல்வர் அவர்கள் நிதி ஒதுக்கி ஆணைகள் பிறப்பித்தார். அந்த வகையில் கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகிறது. சில பணிகள் நிறைவடைந்து திறப்பு விழாவுக்காகத் தயார் நிலையில் உள்ளது.

## கோரிப்பாளையம் பாலம் கட்டும் பணி விரைவு பெறுகிறது

மதுரையின் இதயப்பகுதியான கோரிப்பாளையம் சந்திப்பு மற்றும் வைகை ஆற்றைக் கடந்து செல்லும் வகையில் ரூ.190.40 கோடி மதிப்பீட்டிலான மேம்பாலக் கட்டுமானப் பணிகள் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டு விரைந்து நடைபெற்று வருகிறது. அவ்வப்போது, பணிகளை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஏ.வ.வேலு, மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி.மூர்த்தி, ஆகியோருடன் இணைந்து சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து வருகிறோம்.



## வண்டியூர் கண்மாய் மேம்பாட்டு பணிகள்

மதுரை வண்டியூர் கண்மாயை மேம்படுத்தி அங்கு முன்பு இருந்த பூங்கா மற்றும் வண்டியூர் கண்மாயை ரூ.99 கோடியில் டூரிஸ்ட் ஸ்பாட் திட்டத்தின் கீழ் மேம்படுத்தி சிறந்த பொழுதுபோக்கு இடமாக மாற்றும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. விரைவில் இப்பூங்கா மக்கள் பயன்பாட்டுக்கு வரும்.



வண்டியூர் கண்மாயின் மையத்தில் அமையும் சிறிய தீவு



வாகன நிறுத்த வசதியுடன் அழகாக்கப்படும் வண்டியூர் கண்மாய்

# குறை தீர்ப்பு முகாம்

## தொகுதி மக்கள் சந்திப்பு

நமது மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி அலுவலகம் மகபூப்பாளையத்தில் அமைந்துள்ளது. இலவச இ–சேவை மைய சேவைகளுடன் அங்கு தொடர்ந்து அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

மேலும், சொக்கிகுளத்தில் உள்ள எனது இல்ல வளாகத்தில் முகாம் அலுவலகம் செயல்பட்டு வருகிறது.

எனது குறை தீர்க்கும் மைய தொலைபேசியில் மட்டுமன்றி வாட்ஸ்அப், மின்னஞ்சல் மேலும் இந்த அறிக்கையில் உள்ள **QR Code** மூலமாகவும் எந்த நேரமும் புகார்களையும், கோரிக்கைகளையும் மக்கள் அளித்திட வழி செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி, தொகுதிக்குட்பட்ட 16 வார்டுகளில் 25 இடங்களில் புகார் பெட்டி நிறுவப்பட்டு அதன் மூலம், மக்கள் என்னைத் தொடர்பு கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. பெறப்படும் புகார்கள் துறை ரீதியாக அனுப்பி வைக்கப்பட்டு தீர்வு காணப்பட்டு வருகிறது.

கடந்த 12 மார்ச் 2025 அன்று எனது தலைமையில் மாபெரும் குறை தீர்ப்பு முகாம் நடைபெற்றது. அனைத்து துறை சார்ந்த அலுவலகப் பணியாளர்களை அழைத்து, இம்முகாமினை ஒருங்கிணைத்து நடத்தினோம். பொதுமக்களிடம் இருந்து மொத்தம் 662 மனுக்கள் பெறப்பட்டு அவை துறை ரீதியாக பிரித்தளிக்கப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, அம்மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தொடர் ஆய்வுகள் நடத்தப்பட்டது.

அதன் அடுத்த கட்டமாக, மதுரை மத்திய தொகுதியில் உள்ள 16 வட்டங்களுக்கும் நான், அனைத்து அரசுத் துறை அலுவலர்களுடன் இணைந்து, நேரடியாகச் சென்று, பொதுமக்களைச் சந்தித்து குறைகளை கேட்டு ஆய்வு செய்து வருகிறேன். கடந்த செப்டம்பர் மாதம் 2ஆம் தேதி முதல் தொடர் சுற்றுப்பயணமாக தொகுதி முழுவதும் பயணித்து மக்களைச் சந்தித்து வருகிறேன்.

மேலும் எனது குறைதீர்க்கும் மைய தொலைபேசி எண்

**73055 19999**

மின்னஞ்சல்: **ptrmadurai1@gmail.com**

இந்த அறிக்கையில் உள்ள QR code மூலமாகவும்
எந்த நேரமும் புகார்களையும்,
கோரிக்கைகளையும் மக்கள் அளிக்கலாம்.



# நன்றி...



முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் ஆசியோடு, கழக தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மக்கள் சேவையில் அடியெடுத்து வைத்த நான், நமது தொகுதி மக்களுக்கும், எனது துறை சார்ந்தும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு வருகிறேன்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் அமைச்சராகப் பொறுப்பு வகித்து முதல்வர் அவர்கள் அளித்து வரும் ஆதரவில் இந்தத் துறையினை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்றுள்ளேன். பல்வேறு மாற்றங்களை இந்தத் துறையில் கொண்டு வந்துள்ளேன்.

நான்காண்டுகள் நிறைவுற்ற நிலையில், மதுரை மத்திய சட்டமன்றத் தொகுதி மக்களான உங்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக என்றென்றும் பணியாற்றி வரும் திராவிட மாடல் அரசின் பலன்கள் முழுவதும் உங்களை சேர்ந்திட உழைத்திடுவேன் என தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

தங்கள் அன்புள்ள

பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன்.

மக்கள் தொடர்பு மைய தொலைபேசி
73055 19999
/ptrmadurai /meendumptr /PTRmadurai